கணிதவியல் துறை சார்பில் மாநில அளவிலான ஜமாடிக்ஸ் என்ற மாணவர் திறன் போட்டி

இடம் : அப்துல் கபூர் கலையரங்கம்
தேதி : பிப்ரவர் 21, செவ்வாய்கிழமை

ஜமாலியன் டைம்ஸ்

Show Us The Right Path — Since 1951

தமிழ் மாத இதழ்

இதழ்–1 சுற்று–4 தனிச்சுற்று | JAMALIANTIMES | இலவச பிரதி ஜனவரி, 2017

தகவல் தொழில் நுட்பத்துறை சார்பில் மாநில அளவிலான மாணவர் திறன் போட்டி

இடம் : அப்துல் கபூர் கலையரங்கம்
தேதி : பிப்ரவரி 18, சனிக்கிழமை

அரசு வேலைக்காக ஏங்காமல், வேலைகளை உருவாக்கும், தொழில் திறமைகளை மாணவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்

பட்டமளிப்பு விழாவில் கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முதீன் அறிவுரை

அரசு வேலைக்காக ஏங்காமல், வேலைகளை உருவாக்கும், தொழில் திறமைகளை மாணவர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என ஜமால் முஹம்மது கல்லூரி அரசு உதவி பெறும் பட்டமளிப்பு விழாவில் கல்லூரி செயலாளர் தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் பட்டங்களை வழங்கி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் அரசு உதவிபெறும் பிரிவின் பட்டமளிப்பு விழாதிங்கள்கிழமை மாலை 3 மணியளவில் கல்லூரி அப்துல் கபூர் கலையரங்கத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். முகமது சாலிஹ் தலைமை வகித்து கல்லூரியின் ஆண்டு அறிக்கை மற்றும் கல்லூரியின் சிறப்புகளை பற்றி பேசினார். பின்னர், பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை வரவேற்று பேசினார்.

இதில் இளநிலை படிப்பில் 454 மாணவர்களும், முதுநிலை படிப்பில் 250 மாணவர்களும் எம்.ஃபில் 15 மாணவர்கள் என மொத்தம் 719 மாணவர்கள் பட்டம் பெற்றனர். விழாவில், சிறப்பு விருந்தினராக, கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முத்தீன் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினார்.

பின்னர், மாணவர்கள் மத்தியில் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் பேசியதாவது : இன்றைய மாணவர்கள் பல்வேறு சமூக ஊடகங்களில் சிக்கித்தவித்து வருவதாகவும், அவர்களை மீட்கவும், அன்றாட வேலைகளில் தனிக் கவனம் செலுத்தவும் மாணவர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

மேலும், அரசு வேலைக்காக ஏங்காமல், வேலைகளை உருவாக்கும், தொழில் திறமைகளைஏற்படுத்தியும்உந்துசக்தியாகத் திகழ வேண்டும். காலச் சூழ்நிலைக்குத் தக்கவாறு தங்களின் திறமைகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பொருளாளர் கலீல் அஹமது, துணைச் செயலாளர் ஜமால் முஹமது, கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் இஸ்மாயில் மொகைதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர், அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும், முன்னாள் மாணவ மாணவிகள், பட்டம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

பின்னர், பட்டம் பெற்ற மாணவர்கள் அந்தந்த துறை தலைவர்களிடம் பட்டத்தை காண்பித்து புகைப்படம் எடுத்து கொண்டனர். மாணவர்கள் கடந்த கால கல்லூரி நினைவுகளை மற்ற மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டதுடன், இனி இது போன்று நாம் எப்போது ஒன்று சேர்வோம் என்று தெரியவில்லை என்று கண்ணீர் மல்க மாணவர்கள் கட்டித் தழுவி பரிமாறிக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியை பார்க்கும் பொழுது ஒரு வியப்பாக அமைந்தது.

சாதி, மதங்களை கடந்து சேவையை குறிக்கோள்களாக கொண்டவர்கள் பெண்கள் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா

துணைச் செயலாளர் ஹாஜி எம்.ஜே ஜமால் முஹம்மது பேச்சு

சாதி மதங்களை கடந்து சேவையை குறிக்கோள்காளாக கொண்டவர்கள் பெண்கள் தான் என்று ஜமால் முஹம்மது மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கல்லூரி துணைச் செயலாளர் ஹாஜி எம்.ஜே ஜமால் முஹம்மது மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசினார்.

திருச்சி ஜமால் முஹம்மது மகளிர் கல்லூரியின் பட்டமளிப்பு விழா அப்துல் கபூர் கலையரங்கத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். முகமது சாலிஹ் தலைமை வகித்து கல்லூரியின் ஆண்டு அறிக்கை மற்றும் கல்லூரியின் சிறப்புகளை பற்றி பேசினார். பின்னர், பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை வரவேற்று பேசினார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கல்லூரி துணைச்செயலாளர்ஹாஜிஎம்.ஜேஜமால்முஹம்மது இளைநிலை படிப்பில் 927மாணவிகளும், முதுகலை படிப்பில் 235 மாணவிகளும், எம்.ஃபில் படிப்பில் 120 மாணவிகளுக்கும் ஆக மொத்தம்1282மாணவிகளுக்குபட்டங்களைவழங்கிபேசியதாவது : நாட்டின் பல்வேறு துறைகளில் பெண்கள் சாதனை படைக்க வேண்டும் என்றும், நாட்டிற்கும், வீட்டிற்கும் பெண்கள் சேவை செய்துவருகிறார்கள். அந்த சேவைகளெல்லாம், இந்திய நாட்டிற்கு மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கு ஒரு வரப் பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஆனால், ஆண்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் முடிந்த உடன் ஓய்வு வயதை அடைகின்றனர். ஆனால், தற்கால சூழ்நிலையில் பெண்கள் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்து வீட்டையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டியதாக உள்ளது.

மேலும், பெண் என்பவள் குடும்ப விளக்காக நாம் மதிக்க வேண்டும். விளக்கில் பிரகாசத்தை கொண்டே குடும்ப வாழ்க்கையின்சிறப்பான இடத்தை பெண்கள் அடைய வேண்டும். ஜாதி, மத பேதங்களைகடந்து மனதில் சேவை ஒன்றே குறிக்கோளாக கொண்டவர்கள் பெண்கள் தான் இதில் எந்த வித மாற்றம் இல்லை. ஆனால், பெண்கள் எல்லாத்துறைகளிலும் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகிறார்கள். அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் நமது கல்லூரியை சேர்ந்த மாணவிகள் விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளார்கள். பட்டங்களை பெற்ற மாணவிகள் பட்டங்களை பெற்றதோடு மட்டுமில்லாமல், நீங்கள் படித்த பாடங்களை மறந்து விடாத அளவிற்கு நீங்கள் அதை பாதுகாத்து கொண்டு கல்வியை அடுத்தவர்களுக்கும் கற்றுக் கொடுத்து அவர்களையும் கல்வித் தரத்தை உயர்த்த பாடுபட வேண்டும் என்றும் மாணவிகளுக்கு அறிவுரை வழங்கி இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர், தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன், பொருளாளர் கலீல் அஹமது, கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் இஸ்மாயில் மொகைதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர்ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர், அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும், முன்னாள் மாணவமாணவிகள், பட்டம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

பின்னர், பட்டம் பெற்ற மாணவிகள் அந்தந்த துறை தலைவர்களிடம் பட்டத்தை காண்பித்து புகைப்படம் எடுத்து கொண்டனர். மாணவிகல் கடந்த கால கல்லூரி நினைவுகளை மற்ற மாணவிகளுடன் பகிர்ந்து கொண்டதுடன், இனி இது போன்று நாம் எப்போது ஒன்று சேர்வோம் என்று தெரியவில்லை என்று கண்ணீர் மல்க மாணவிகள் கட்டித்தழுவி பரிமாறிக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியை பார்க்கும் பொழுது ஒரு வியப்பாக அமைந்தது.

இறைவன் பொறுமையாளர்களோடு இருப்பதால் வாழ்வில் உயர்வதற்கு பொறுமை அவசியம் ஆண்கள் சுயநிதிப் பிரிவு பட்டமளிப்பு விழா

ஏ.கே. கலீல் அஹமது பேச்சு

இறைவன் பொறுமையாளர்களோடு இருப்பதால் வாழ்வில் உயர்வதற்கு பொறுமை அவசியம் என்று ஜமால் முஹம்மது கல்லூரி ஆண்கள் சுயநிதிப் பிரிவு பட்டமளிப்பு விழாவில், மாணவர்களுக்கு கல்லூரியின் பொருளாளர் ஏ.கே கலீல் அஹமது அறிவுரை வழங்கினார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் சுயநிதி ஆண்கள் பிரிவு பட்டமளிப்பு விழா செவ்வாய் கிழமை மாலை 3 மணியளவில் கல்லூரிக் அப்துல் கபூர் கலையரங்கத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். முகமது சாலிஹ் தலைமை வகித்து கல்லூரியின் ஆண்டு அறிக்கை மற்றும் கல்லூரியின் சிறப்புகளை பற்றி பேசினார். பின்னர், பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை வரவேற்று பேசினார்.

இந்த விழாவில், சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பொருளாளர் ஹாஜி. கே.ஏ. கலீல் அஹமது கலந்து கொண்டு இளநிலை படிப்பில் 686 மாணவர்களும், முதுநிலை படிப்பில் 206 மாணவர்களும் எம்.ஃபில் படிப்பில் 97 மாணவர்கள் என மொத்தம் 989 மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கினார்.

பின்னர், பட்டங்களை பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி பொருளாளர் ஹாஜி கே.ஏ கலீல் அஹமது மாணவர்கள் மத்தியில் பேசியதாவது : இன்றைய மாணவர்கள் எந்த ஒரு விஷயத்தையும் உடனடியாக செய்து முடிக்க வேண்டும் என்ற வேகத்தில் உள்ளனர். வேகத்தோடு சேர்ந்த பொறுமை மிக அவசியம் என்றும் இறைவன் பொறுமையாளர்களோடு இருப்பதால் வாழ்வில் உயர்வதற்கு பொறுமைதெளிவு தன்னம்பிக்கை ஆகிய அனைத்தும் ஒருங்கே அமைந்தால் மட்டுமே வெற்றி பெற முடியும் என மாணவர்களுக்கு ஊக்கமளித்தார். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜ்முத்தீன் , துணைச் செயலாளர் எம்.ஜே. ஜமால் முஹமது, கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் இஸ்மாயில் மொகைதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர், அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும், முன்னாள் மாணவ மாணவிகள், பட்டம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

பின்னர், பட்டம் பெற்ற மாணவர்கள் அந்தந்த துறை தலைவர்களிடம் பட்டத்தை காண்பித்து புகைப்படம் எடுத்து கொண்டனர். மாணவர்கள் கடந்த கால கல்லூரி நினைவுகளை மற்ற மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டதுடன், இனி இது போன்று நாம் எப்போது ஒன்று சேர்வோம் என்று தெரியவில்லை என்று

கண்ணீர் மல்க மாணவர்கள் கட்டித் தழுவி பரிமாறிக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியை பார்க்கும் பொழுது ஒரு வியப்பாக அமைந்தது.

கலைக் கோட்டை, கல்விக் கோட்டை ஜமால் முஹம்மது கல்லூரியை உருவாக்கிய ஜமால் முஹம்மது, காஜா மியான் இவர்களின் நட்பை உறவை நாங்கள் பின் தொடர்கிறோம் குவைத், துபாய், அபுதாபி நாடுகளில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டம்

முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் பேச்சு...

தென்னகத்தின் அலிகார் என்று போற்றப்படும் திருச்சி மலைக்கோட்டை மாநகரில், அமைந்துள்ள கலைக் கோட்டை, கல்வி கோட்டை ஜமால் முஹம்மது கல்லூரியை உருவாக்கிய இருவர் உருவாக்கிய நட்பை நாங்களும் தொடர்ந்து பின்பற்று வருகிறோம் என்று துபாய் மற்றும் அரபு எமிரேட்ஸில் உள்ள குவைத் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் சந்திப்பு கூட்டத்தில் கல்லூரி செயலாளர் மற்றும் தலைவர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் பேசினார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் படித்த மாணவர்கள் உலகத்தில் அனைத்து நாடுகளிலும் பல்வேறு துறைகளில் வேலை பார்த்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமில்லாமல் சென்னை, திருச்சி, மற்றும் மலேசியா, சிங்கப்பூர், சவுதி அரேபியா, துபாய், ஜித்தா, கத்தார் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் முன்னாள் மாணவர் சங்கம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஜமால் முஹம்மது கல்லூரியில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக முன்னாள் மாணவர்களால் இந்நாள் மாணவர்களுக்கு கல்லூரியில் பயிலும் இளங்கலை, முதுகலை படிக்கும் ஏழை, எளிய மாணவ மாணவியரைச் சேர்ந்த 1000 பேருக்கு தோராயமாக 60இலட்சம் கல்வி உதவித் தொகை மற்றும் உணவு விடுதி கட்டணம் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளது.

அரபு எமிரேட்ஸ்க்கு உட்பட்ட துபாய், அபுதாபி ஆகிய நாடுகளிலும் குவைத்திலும் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது. கல்லூரியில் இருந்து செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் தலைமையில் உதவிச்செயலாளர் ஹாஜி ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாலிகு, கூடுதல் துணை முதல்வரும், முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளருமான இஸ்மாயில் முகைதீன், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் ஸமது, சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் சுபைர், பேராசிரியர் ராஜா முஹம்மது, ஆகியோர் சென்றனர்.

முதல் நாளில் துபாய் சென்ற அவர்களுக்கு அங்குள்ள முன்னாள் மாணவர்கள் விமான நிலையத்தில் சிறப்பான முறையில் வரவேற்பு அளித்தனர். பின்னர் துபாயில் உள்ள அல்ஷேக் ரஷீது கலையரங்கத்தில் விஜய் டி.வி சிரிப்புடா புகழ் ஈரோடு மகேஷ் தலைமையில் அசத்தல் அரங்கம் நடைபெற்றது. இதில் துபாயில் உள்ள தமிழர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் பேசுகையில் : இந்த முன்னாள் மாணவர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டதில் பெருமைப்படுகிறேன். இந்த கல்லூரி 1951ம் ஆண்டு ஜமால் முஹம்மது மற்றும் காஜாமியான் ராவுத்தர் ஆகியோரால் எந்த நோக்கத்தோடு தொடங்கப்பட்டதோ அதே நோக்கத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், இவர்கள் ஆற்றிய பணிகள் குறைவராமல் இன்று வரை நாங்கள் பாதுகாத்து வருகிறோம். தென்னகத்தின் அலிகார் என்று போற்றப்படும் திருச்சி மலைக்கோட்டை மாநகரில், அமைந்துள்ள கலைக் கோட்டை, கல்வி கோட்டை ஜமால் முஹம்மது கல்லூரியை உருவாக்கிய இருவர் உருவாக்கிய நட்பை உளவை நாங்களும் தொடர்ந்து பின்பற்று வருகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

உதவிச்செயலாளர் ஹாஜி ஜமால் முஹம்மது பேசுகையில் : அடிமை இந்தியாவை சுதந்திர இந்தியாவாக மாற்ற காந்தியின் கனவை நினைவாக்க, நிரப்பப்படாத காசோலை கொடுத்தவர் எங்கள் பாட்டனார். அதாவது ஜமால் முஹம்மது சாஹிப் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு கதராடை அணிய கதர் ஆலையை நிறுவியவர் இவருடைய பாட்டனார் அதாவது காஜாமியான் ராவுத்தர். காந்தியின் கனவும் நனவாகிவிட்டன. நாட்டுச் சுதந்திரத்தில், கல்லூரி நிறுவியதிலும் இன்று பல்கி, பெருகி விரிந்து நிற்கும் இக்கல்லூரியின் வளர்ச்சியில் எங்கள் இலக்கை நோக்கி பயணிக்கிறோம். இந்த வருடம் விஷுவல் கம்யூனிகேசன் துறை தொடங்கப்பட்டுள்ளது. அதே போல, அனைத்து துறைகளும் ஆரய்ச்சித் துறையாக மாறி விட்டது. ஆகையால் முன்னாள் மாணவர்கள் நீங்கள் இந்தியா வரும் போது, உங்களது கல்லூரிக்கு வந்து மாணவர்களுக்கு ஊக்கப்படுத்துமாறும் அவர்களுக்கு, நீங்கள் ஏதேனும் வேலை வாய்ப்பு சம்பந்தமான அறிவுறைகளை வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாலிகு பேசுகையில் நமது கல்லூரியில் அனைத்து சமுதாய மாணவ, மாணவியருக்கும் நீங்கள் கொடுக்கிற கல்வி உதவித் தொகை கொண்டு பயின்று வருகிறார்கள். நமது கல்லூரி 21 இளநிலை, மற்றும் 21 முதுநிலை துறைகள் இருக்கிறது. அதே போன்று, எல்லாத் துறைகளும் ஆராய்ச்சித் துறையாக மாறி வருகிறது. இன்றைக்கு கல்லூரி முன்னாள் மாணவர்களுக்கும் திறந்து இருக்கும். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். வந்து மாணவர்களுக்கு தகுந்த ஆலோசனை தாருங்கள் இவ்வாறு அவர் பேசினார்.

கல்லூரி கூடுதல் துணை முதல்வரும் முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளருமான முனைவர் இஸ்மாயில் முகைதீன் பேசுகையில் : நமது கல்லூரியில் படித்த மாணவர்கள் உலகத்தின் பல்வேறு இடங்களில் வேலை பார்த்து வருகிறார்கள். கல்லூரி எங்களுக்கு கல்வியை, மனித மாண்புகளை கற்று தந்து அப்பொழுது கல்லூரியின் நாங்கள் முன்னாள் மாணவர்களாகிய நாங்கள் பெருமை அடைந்தோம். முன்னாள் மாணவர்களாகிய நாங்கள் உலகமெங்கிலும் நல்ல இருப்பதை அறிந்து கல்லூரி பெருமை அடைகிறது. மேலும், தாயகத்திற்கு வரும் பொழுது நமது கல்லூரி வீட்டிற்கு வர வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறேன். அது மட்டுமில்லாமல் இந்நாள் மாணவர்களுக்கு பல்வேறு அறிவுகளை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

அரபு எமிரேட்ஸில் உள்ள துபாயில் ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் 20வது ஆண்டு சந்திப்பு கூட்டம் பள்ளியில் நடைபெற்றது. ஹாஜி எம்.எம் ஜியாவுதீன் தலைமை வகித்து பேசினார். முன்னாள் மாணவர் முஹம்மது இஸ்ஹாக் அனைவரையும் வரவேற்று பேசினார். ஹாஜி எம்.எம் ஜியாவுதீன் தனது தலைமை உரையில் ஜமால் முஹம்மது கல்லூரிக்கு விரைவில் கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு கட்டிடம் கட்டி தருவதாக உறுதி கூறினார். விழாவில் இ.டி.ஐ குரூப் நிறுவனத்தின் இயக்குநர் அன்வர் பாட்ஷா, மற்றும் திருச்சி அய்மான் மகளிர் கல்லூரி செயலாளர் ஹபிபுல்லா, கல்லூரி நிர்வாகிகள் மற்றும் முன்னாள் மாணவர்களும் கலந்து கொண்டனர். முடிவில் முன்னாள் மாணவர் முஹம்மது பயாஸ் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை முஹம்மது ரஹ்மத்துல்லா, ஜமால் முஹம்மது ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள். இதில் 200க்கும் மேற்பட்ட மாணவர்களும் மற்றும் மாணவியர்களும் கலந்து கொண்டனர்.

துபாயில் உள்ள ஈமான் சங்கத்தின் சார்பில் ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகிகளுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். இதில், ஈமான் சங்க நிர்வாகிகள் காதர் மொய்தீன், கல்விக் குழு செயலாளர் பைஜுர் ரஹ்மான், மீடியா செயலாளர் முதுவை இதயத்துல்லா மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அபுதாபியில் அய்மான் சங்கத்தின் தலைவர் ஹாஜி சம்சுதீன் தலைமையில் ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகிகள் மற்றும் முதல்வர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர் சந்திப்பு கூட்டமும் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தொழில் அதிபர் எஸ். ஹமீது, திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மகேஷ் பொய்யா மொழி, மற்றும் கல்லூரி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அதில் முன்னாள் மாணவர்கள் கல்லூரி மற்றும் நினைவுகளை இந்த கூட்டத்தில் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர், திருச்சி அய்மான் மகளிர் கல்லூரி தலைவர் பேசுகையில் : நானும் ஜமால் முஹம்மது கல்லூரியில் பயின்று நல்ல நிலமைக்கு வர காரணம் அதே போன்று அய்மான் கல்லூரி நிர்வாகிகள் அனைவரும் இதே கல்லூரியில் பயின்றவர்கள் தான், எந்த நோக்கத்தோடு ஜமால் முஹம்மது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதோ அதே போன்று தான் திருச்சி அய்மான் மகளிர் கல்லூரியும், இரண்டுமே ஒரே கல்லூரி தான் இதில் எந்த வித மாற்றம் கிடையாது. எல்லாம் நோக்கமும் ஒன்று தான் இவ்வாறு அவர் பேசினார். துபாயில் உள்ள அமிட்டி பல்கலைக்கழகத்திற்கு கல்லூரி நிர்வாகிகள் சென்று ஆய்வு செய்தார்கள்.

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத்தின் குவைத் பிரிவின் 19வது ஆண்டு சங்கத்தின் சந்திப்பு கூட்டம் தஸ்மா ஆசிரியர் சங்க கட்டடத்தில் நடைபெற்றது. விழாவுக்கு சிறப்பு விருந்தினராக அகட விகடம் புகழ் வாணியம்பாடி முனைவர் அப்துல் காதர், மூத்த அறிவியல் ஆராய்ச்சியாளர் நீலமணி, செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் தலைமையில் உதவிச் செயலாளர் ஹாஜி ஜமால் முஹம்மது, ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாலிகு, கூடுதல் துணை முதல்வரும், முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளர் இஸ்மாயில் முகைதீன், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் ஸமது சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் சுபைர், பேராசிரியர் ராஜா முஹம்மது ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்.

முன்னதாக முன்னாள் மாணவர் முத்துக் குமார் அனைவரையும் வரவேற்று பேசினார். விழாவில் சங்கத்தின் தலைவர் அமீர் ஆண்டு அறிக்கை வாசித்தார். முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளர் முஹம்மது இக்பால், துணைத் தலைவர் முனீர், மீடியா செயலாளர் இத்ரீஸ், அஸ்மத் பாட்ஷா, முஹம்மது இலியாஸ், சையது உவைஸ், ஜமால் மைதீன், மற்றும் முன்னாள் மாணவர் சங்கத்தின் நிர்வாகிகள் மாணவர்கள் கலந்து கொண்டனர். பின்னர், குவைத்தில் உள்ள இன்போடாட்காம் இணையத் தளம் ஜமால் முஹம்மது கல்லூரி பற்றிய தகவல் மையத்தையும் திறந்து வைக்கப் பட்டது. இந்த இணைய தளத்தில் கல்லூரி பற்றிய அனைத்து தகவல்களை தெரிந்து கொள்ளலாம். குவைத்தில் உள்ள திறந்தவெளி அரங்கத்தில் நபிகள் நாயகம் (ஸல்) பிறந்த நாளை முன்னிட்டு மீலாது நபி விழாவிற்கு முன்னாள் மாணவர் சங்கத்தின் துணைத்தலைவர் முனீர் தலைமையில் நடைபெற்றது. விழாவில் வாணியம்பாடி அகட விகடம் புகழ் முனைவர் அப்துல் காதர் மற்றும் கல்லூரியின் செயலாளர் மற்றும் முதல்வர் மற்றும் இயக்குநர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்

எமிரேட்ஸ் உட்பட்ட அபுதாபி குவைத் உள்ளிட்ட அமைப்பில் உள்ள மாணவர்கள் ஏராளமான முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் இந்த மாணவர்களுக்கு அதிக அளவில் கல்வி உதவித் தொகை கொடுப்பதாகவும், உறுதி அளித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்



காட்சித் தொடர்பியல் துறை சார்பில் கோடுகள் வழியே கேலிச்சித்திரம் தலைப்பில் பயிற்சிப்பட்டறை

காட்சி தொடர்பியல் துறை சார்பில் கோடுகள் வழியே கேலிச்சித்திரம்என்ற தலைப்பில் ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

விழாவில் வரவேற்புரையாற்றிய அறிவியல் முதன்மையர் முனைவர் ஜார்ஜ் அமலரத்தினம், மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் தொலை நோக்குடன் ஏற்படுத்திக் கொடுத்து கற்றலை இனிமையாகவும், எளிமையாகவும் மாற்றி கல்லூரி நிர்வாகம் செயலாற்றி வருகிறது என்றார்.

பயிற்சி பட்டறையை துவக்கி வைத்துப் பேசிய செயலர் மற்றும் தாளாளர் நம் கருத்தை எளிமையாகவும் பிறர் மனம் புண்படாதவாறு நகைச்சுவையாகவும் எடுத்துரைக்க கேலிச்சித்திரம் ஒரு சிறந்த ஊடகம். காலத்திற்கேற்றவாறு அதனை பயன்படுத்துவது ஆக்கபுர்வமானது என்றார்.

விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றிய முதல்வர் புதிய சிந்தனைகளுடன் ஆக்கத்திறனை வளப்படுத்திக் கொள்ள பல்வேறு துறை வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிப்பட்டறை வழங்கப்படுகிறது. மாணவர்கள் அடிப்படைகளை கண்ணும் கருத்துமாக கற்றுக் கொள்வதன் மூலம் சிறந்த படைப்பாளிகளாகலாம் என்றார்.

சுயநிதிப் பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிஹால், விழாநாயகர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார். முதலாமாண்டு மாணவர் கஜேந்திர பாரிக்கு சிறந்த திரைப்பட விமர்சனத்துக்கான பரிசை செயலர் மற்றும் தாளாளர் வழங்கினார். உதவிப்பேராசிரியர் சண்முக வேலாயுதம் நன்றியுரை வழங்கினார். உதவிப்பேராசிரியர் ராமகிருஷ்ணன் மற்றும் மாணவர்கள் பங்கு கொண்டு பயன்பெற்றனர்.

பயிற்சி பட்டறையில் சுகுமார்ஜீ, ஒரு கருத்தை நாசக்காகவும், நகைச்சுவையாகவும் கேலிச்சித்திரத்தின் மூலம் வெளிப்படுத்தும்போது மக்கள் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வார்கள் என்றார். இதற்கு அடிப்படையான கோடுகளை பயிற்சியின் மூலம் எங்ஙனம் வெற்றிகரமாக கையாள்வது என்பதை செயல்விளக்கத்தின் மூலம் பயிற்றுவித்தார்.

குடியரசு தினத்தையொட்டி கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜூமுதீன் தேசிய கொடி ஏற்றிவைத்து என்சிசி மாணவ, மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில்,குடியரசு தினத்தையொட்டி தேசிய கொடி ஏற்றி மாணவ மாணவிகளின்அணிவகுப்புமரியாதையைகல்லூரி செயலாளர்ஏற்றுக் கொண்டார்கள்.

திருச்சி அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரி முதல்வரும்ஜமாத்உலமாதலைவருமானமவ்லவி முப்தி ருஹூல் ஹக் ரஷாதி தேசிய கொடியேற்றி வைத்து மாணவர் மத்தியில் பேசுகையில் இந்தியாவில் சுதந்திரம் வாங்வதற்காக பல முஸ்லிம்கள் பல போராட்டங்களில் கல்ந்து பல தியாகங்களை செய்தவர்கள் முஸ்லிம்கள் என்றும் பல்வேறு கருத்துகளை எடுத்துறைத்து மாணவர் மத்தியில்பேசினார். முன்னதாக மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் நடந்த குடியரசு தின விழாவிற்கு கல்லூரி முதல்வர் தலைமை வகித்தார், கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர்முனைவர்ஏ.கே.காஜாநஜூமுதீன்தேசிய கொடியினை ஏற்றிவைத்து கல்லூரியின் என்சிசி மாணவ,மாணவிகளின்அணிவகுப்புமரியாதையை ஏற்றுக்கொண்டார்.குடியரசுதினவிழாவில்சிறப்பு விருந்தினராக அரபிக் துறை தலைவர் முனைவர் முஹைதீன்அப்துல்காதர்கலந்து கொண்டு சுதந்திர தின பற்றிய விளக்க உரை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் கல்லூரி பொருளாளர் ஹாஜி ஏ. கே.கலீல்அகமது, துனை செயலாளர் ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மதுசாலிகு,துணைமுதல்வர்கள்முனைவர் முஹம்மது இபுராஹிம், முனைவர் இஸ்மாயில் மொய்தீன், சுயநிதி பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குனர்கள் முனைவர்முஹம்மது பாசில், பேராசிரியர்ஜமால் முஹம்மது யாசின் ஜுபைர், மேலாண்மை துறை இயக்குநர்முனைவர்அப்துல்சமது மற்றும்துறைத் தலைவர்கள் பேராசிரியர்கள், மாணவர்கள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஜமால் முகம்மது கல்லூாயில் 1992–95 வரை படித்து விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் 5க்கு பெறப்பட்ட முன்னாள் மாணவர்கள் கல்லூரிக்கு விதை தந்தார்கள். அவர்களை கல்லூரி மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முதீன், கூடுதல் துணைமுதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன் ஆகியோர் வரவேற்றார்கள். பின்னர் அவர்கள் கடந்தகால கல்லூரி நினைவுகளை சுமார் 2 மணிநேரம் அவர்களை பகிர்ந்து கொண்டார்கள். காஜாமியான் விடுதிக்கு சென்று அவர்கள் தங்கியிருந்த விடுதியை பார்த்து கடந்த விடுதியில் நடந்த சம்பவங்களை நினைவு கூர்ந்தார்கள். விடுதியின் உணவான குஸ்காவை சாப்பிட்டு கடந்த கால போல விடுதி உணவுகள் இருக்கிறது என்றும் விடுதி நிர்வாகத்தை பாராட்டினார்கள். விடுதி மாணவர்களுக்கு கிர்க்கெட் போட்டியை முன்னாள் மாணவர்கள் தொடங்கி வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள்.

கணிதவியல் துறை சார்பில் பல்நோக்கு பார்வையில் ஒழுக்கம் என்ற கருத்தரங்கம்

ஜமால் முகமது கல்லூரியில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி கணிதவியல் துறை சார்பில் பல்நோக்கு பார்வையில் ஒழுக்கம் என்ற தலைப்பில் லண்டன் மருத்துவர் மற்றும் உளவியல் ஆலோசகர் பழனியப்பன் சுந்தரம் சிறப்புரையாற்றினார். முனைவர்.ஏ.கே.காஜா நஜீமுதீன் செயலர் மற்றும் தாளாளர் அவர்கள், உதவிச் செயலர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முகமது அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர். எஸ். முகமது சாலிகு, முதல்வர் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். முன்னதாக முனைவர்.எஸ்.இஸ்மாயில் மொய்தீன், துறை தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.இந்நிகழ்வில் கல்லூரிப் பொருளாளர் ஹாஜி. கே.ஏ.கலீல் அகமது, துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் முனைவர். ஆர். ஜாகிர் ஹுசைன், மற்றும் என்.முகமது தொய்யுப், சிறப்பாக செய்திருந்தார்.

அய்யம்பேட்டை அஞ்சுமன்அறிவிதம் இஸ்லாமிய தாலச்சாற மையத்தின் அறங்காவலர் குழ தலைவரும் விழா அறக்கட்டளை இயக்குநர் ஹாஜி பி.எம். ஐபருல்லாஹ் கல்லூரிக்கு வருகை தந்தார்கள். அவர்களை கல்லூரி நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் மாணவ மத்தியில் பெண்கள் கல்வியை எப்படி கற்றுக்கொள்வது பெறும் எதிர்காலத்தில் நாம் எப்படி செயல்படுவது குரித்து மாணவிகளிடம் கலந்துரையாடினார். விழாவில் கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முத்தீன், உதவிச் செயலாளர் ஹாஜி ஜமால் முகம்மது முதல்வர் முனைவர் முகம்மது சாளடு, கூடுதல் துணை முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரபுத்துறை சார்பில் எக்ஸ்போ''17, இஸ்லாமும் அறிவியலும் என்ற தலைப்பில் இரண்டு நாள் கண்காட்சி

திருச்சிஜமால்முஹம்மதுகல்லூரிஅரபுத்துறை சார்பில்எக்ஸ்போ''17, இஸ்லாமும்அறிவியலும் என்ற தலைப்பில் இரண்டு நாள் அப்துல் கபூர் குளிர்மை கலைஅரங்கில் நடைபெற்றது. கல்லூரியின்தாளாளர்மற்றும்செயலாளர்டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன் கண்காட்சியை துவக்கி வைத்தார். அதில் தமிழகத்தின் பல்வேறு கல்லூரிகளிருந்து சுமார் நூற்றிஐம்பது மாணவ,மாணவிகளும் கலந்துகொண்டனர். அங்கு அமைக்கப் பட்டிருந்த நாற்பதிற்கும் மேற்பட்ட அரங்குகளில்தங்களின்கருத்துக்களை பல வகைகளில் காட்சிப்படுத்தினர்.

"குர்ஆன் ஹதீஸ் ஒளியில் நோய்களும் அதன் நிவாரணங்களும்" என்ற தலைப்பில் ஒருநாள் சர்வதேச கருத்தரங்கு கல்லூரியின் அல்மன்ஹல் வளாகத்தில் உள்ள குளிர்மை கலைஅரங்கில் நடைபெற்றது. இலங்கை பேராதேனிய பல்கலைக்கழக அரபு மற்றும் இஸ்லாமிய கல்வித்துறை பேராசிரியர் முனைவர் எம். எஸ். முஹம்மது சலீம் நத்வி கலந்துகொண்டு தனது தொடக்கவிழா உரையில் ஆன்மிக மற்றும் சமூக வாழ்வில் மனிதகுலம் முழுமையான ஆரோக்கியத்தோடு வாழ தேவையான அனைத்து வழிகளையும் குர்ஆன் மற்றும் நபி மொழிகளில் நாம் பெற முடியும் என்று சான்றுகளோடு எடுத்துரைத்தார்.

தொடர்ந்து நான்கு அமர்வுகளாக நடைபெற்ற இக்கருத்தரங்கில் இலங்கை, மலேசிய, அண்டை மாநிலங்களானகேரளா, டெல்லி, திருநெல்வேலி, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் கலந்துகொண்டு சுமார் 30க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளைசமர்பித்தனர். கல்லூரியின் தாளாளர்மற்றும்செயலாளர்டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன் ஆய்வு கட்டுரைகள் அடங்கிய ஆய்வுக்கோவை வெளியிட, பொருளாளர் கே.ஏ.கலீல் அஹ்மத் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். மேலாண்மை துறை இயக்குனர்முனைவர்கே. அப்துல்சமது அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மலேசியாவிலிருந்து வருகை தந்த நஸ்ருல்லாஹ் கான், (கான் சாப்ட், மலேசியா), பிற துறை தலைவர்களும் பேராசிரியர்களும் கலந்துக்கொண்டனர்.

கல்லூரியின்முதல்வர்முனைவர். எஸ். முகமது சாலிஹ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு, துறைத்தலைவர் முனைவர். எ.கே. முஹைதீன் அப்துல் காதர் முன்னிலை வகிக்க பேராசிரியர் P.முஹம்மது நஜீப் அனைவரையும்வரவேற்றார்.கருத்தரங்குநிறைவு விழாவில் சென்னை புது கல்லூரியின் துணை முதல்வரும் அரபுத் துறை தலைவருமான முனைவர் அப்துல்லதீப் கலந்து கொண்டு பேருரையாற்றினார். அதை தொடர்ந்து கி ஆ பெ மருத்துவ கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் நைனார் முஹம்மது அவர்கள் கலந்துக்கொண்டனர். கல்லூரியின் செயலர் மற்றும்தாளாளர்டாக்டர். ஏ.கே. காஜாநஜிமுத்தீன் கண்காட்சியில் சிறப்பாக தங்களுடைய திறன்களை வெளிப்படுத்தியவர்களுக்கும், கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் விருதையும் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார். இக்கருத்தரங்கிற்கானஏற்பாடுகளை பேராசியர்கள் முனைவர் எச்.மஹ்பூப் அலி கான், எ.முஹம்மது ஆரிப் ஆகியோரும், கண்காட்சிக்கான ஏற்பாடுகளை பேராசியர்கள் முனைவர்எம். காஜாமைதீன், பி. நஜீப், முனைவர் எ.அப்துல்ரஷித்மற்றும்அனைத்துபேராசிரியர்கள் செய்தனர்.

இந்திய கம்ப்யூட்டர் சொசைட்டியின் சார்பாக ஜமால் முஹம்மது கல்லூரி பேராசிரியர் முனைவர் அப்துல் ரசாக், எம்சிஏ மாணவர் ஹமீது முஹம்மது ரிஸ்வான் ஆகியோருக்கு விருது

இந்திய கம்ப்யூட்டர் சொசைட்டியின் சார்பில் ஜமால் முஹம்மது கணினி துறைக்கு மூன்று விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

ஜமால்முஹம்மதுகல்லூரியின்மாணவர்கிளை சார்பில் கடந்த கல்வியாண்டில் நடைப்பெற்ற பல்வேறு விதமான செயற்ப்பாடுகள் காரணமாக தொடர்ந்து முன்றாவது முறையாக விருதுகள் வழங்கப்பட்டது. இந்திய கம்ப்யூட்டர் சொசைட்டியின் சார்பாக ஜமால் முஹம்மது கல்லூரிக்கு மூன்று விருதுகள் வழங்கப்பட்டன. திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் இந்திய கம்ப்யூட்டர் சொசைட்டியின் மாணவர்கிளை செயல்பட்டு வருகிறது. இக்கிளையின் சிறந்த செயல்பாடுகள் காரணமாக இந்திய அளவில் சிறந்த அங்கிகாரமிக்க மாணவர்கிளை விருது, நீண்டகால தொடர் மாணவர் கிளை ஒருங்கினைப்பாளர் விருது, அதிக ஈடுபாடு கொண்ட மாணவர் கிளை செயற்பாட்டாளர் விருது ஆகிய முன்று விருதுகளை கோயம்புத்தூர் லீமெரிடியன் ஹோட்டலில் நடைப்பெற்ற விழாவில் விருதுகள் வழங்கப்பட்டது.

இவ்விருதுகளை கம்பூட்டர் சொசைட்டியின் இந்திய தலைவர் முனைவர் அனிருபன்பாசு வழ்ங்கினார்கள். உடன்துனைத்தலைவர்சஞ்கய்ம ஹோபத்ரா, செயலாளர்பேராசிரியர்ஏ.கே. நாயக், பொருளாளர்ஆர். கே. வியாஸ் ஆகியோர் இருந்தனர். விருது பெற்ற முனைவர்அப்துல்ரசாக், மாணவர்ஹமீத்முஹம்மதுரிஸ்வான்ஆகியோரை கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜாநஜூமுதீன், கல்லூரி பொருளாளர் ஹாஜி ஏ.கே.கலீல்அகமது, துனை செயலாளர் ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாலிகு, துணை முதல்வர்கள் முனைவர் முஹம்மதுஇபுராஹிம், முனைவர் இஸ்மாயில் மொய்தீன், சுயநிதி பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல்காதர் நிகால், விடுதி இயக்குனர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசின் ஜுபைர், மேலாண்மைதுறை இயக்குநர்முனைவர்அப்துல் சமது, கணினிதுறைதலைவர்முனைவர்ரவி, எம். சி.யே துறை இயக்குநர் முனைவர் ஜார்ஜ் அமலரத்திணம் மற்றும் பேராசிரியர்கள் அனைவரும் பாராட்டினர்.

வேதியியல் துறையில் ஒருநாள் பன்னாட்டு கருத்தரங்கம்

ஜமால் முகமது கல்லூரியில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறையில் ஒருநாள் பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர்.ஏ.கே.காஜா நஜீமுதீன்செயலர்மற்றும்தாளாளர்அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முனைவர். எஸ். முகமது சாலிகு, முதல்வர் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்.

முன்னதாக முனைவர்.எம்.முகமது சிகாபுதீன், வேதியியல் துறை தலைவர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சிறப்பு விருந்தினராக பேரா. முனைவர்.கே.என்.எஸ். சிராஜீதீன், இணைப்பேராசிரியர் வேதியியல் துறைஇ செயின்ஸ் பல்கலைக்கழகமஇ' மலேசியா அவர்கள்உடல்நலத்திற்கும்நோய்களுக்கும் தனி உறுப்பு மற்றும் ஆக்ஸிஜனேற்ற தடுப்பான்களின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் தமது உரையை நிகழ்த்தினார்.

பேரா.முனைவர் பிரசாத்இ விஞ்ஞானிஇ நானோ தொழில் நுட்பவியல் துறைஇ திருப்பதி மற்றும் பேரா. முனைவர்.எம். சிதம்பரேசன் தலைவர் வேதியியல் துறைஇ கிழக்கு பல்கலைக்கழகமஇ' இலங்கை ஆகியோர் கலந்துக் கொண்டு வேளாண் துறையில் நானோ தொழில் நுட்பவியல் பயன்பாடு மற்றும் படிக கட்டுமானத்தில் கரிம மூலக்கூறுகளின் முக்கியத்துவம் என்ற தலைப்பின் கீழ் பல்வேறு விரிவுரைகள்

நடத்தப்பட்டன. 290 ஆராய்ச்சியாளர்கள் தங்களின் கண்டுபிடிப்புகளைப் பற்றி பகிர்ந்து கொண்டனர். நாட்டின் பல பகுதிகளில்இருந்தும்மலேசியாஇ இலங்கை போன்ற அயல் நாடுகளிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் பலர் கலந்து கொண்டு தமது ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

இக்கருத்தரங்கத்திற்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர்.ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி ஏ. கே.கலீல் அகமது, முதல்வர் முனைவர். எஸ். முகமதுசாலிகு,துணைமுதல்வர்.முனைவர். ஏ. முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர். கே.அப்துஸ்சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் பேரா.கே.என்.அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் பேரா. முனைவர். கே.என். முகமது பாஜில், பேரா.எம்.ஏ.ஜமால்முகமது யாசின் ஜுபைர் மற்றும் துறைப் பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்கத்தை சிறப்பித்தனர். கருத்தரங்கிற்கானஏற்பாடுகளை முனைவர். ஜெ. சிராஜீதீன், உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை சிறப்பாக செய்திருந்தார். கருத்தரங்கின் இறுதி நிகழ்வாக நன்றியுரையை வழங்கினார்.

வணிகவியல் துறை சார்பில் உலகளாவிய சூழலில் வாணிப நடைமுறை பற்றிய தேசிய கருத்தரங்கம் 200 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பு

திருச்சிஜமால்முஹம்மதுகல்லூரிவணிகவியல் துறை சார்பில் உலகளாவிய சூழலில் வாணிப நடைமுறைகள் பற்றிய ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. இதில், 200 ஆய்வுத் தொகுப்பு அடங்கிய ஆய்விதழ் வெளியிடப்பட்டது.

திருச்சிஜமால்முஹம்மதுகல்லூரிவணிகவியல் துறை சார்பில் உலகளாவிய சூழலில் வாணிப நடைமுறைகள் பற்றிய ஒருநாள் தேசிய கருத்தரங்கம் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.முஹம்மது சாலிகு தலைமை வகித்து பேசினார். வணிகவியல் துறை முதுநிலை பேராசிரியர் முனைவர் முபாரக் அலி அனைவரையும் வரவேற்று பேசினார்.

200 ஆய்வு தொகுப்பு அடங்கிய ஆய்விதழை கல்லூரி தாளாளர் செயலாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் வெளியிட கல்லூரி பொருளாளர் கே.ஏ கலீல் அஹமது முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

இந்தகருத்தரங்கில்சிறப்புவிருந்தினராககேரளா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முனைவர்ஜி.ராஜு கலந்து கொண்டு பேசுகையில் : உலகளாவிய சூழலில் வாணிபத்தின் தற்போதைய சூழல் பற்றி பேசினார். தொடர்ந்து நான்கு அமர்வுகளாக இந்த கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கத்தின் நிறைவு விழாவில் திருச்சி

செஞ்ஜோசப் கல்லூரி முதல்வர் பி.ஆண்ட்ரு, கல்லூரி தாளாளர் செயலாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் ஆகியோர் கலந்து கொண்டு கட்டுரையாளர்களுக்கு சான்றிதழை வழங்கி பேசினார். விழாவில் வணிகவியல்துறைதலைவர் முனைவர்எஸ்.குலாம்முஹம்மதுஅனைவரையும் வரவேற்று பேசினார். இந்த கருத்தரங்கத்தில் கேரளா, அந்தமான், மற்றும் தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்பத்தூர், ஈரோடு, மதுரை, சென்னை உள்லிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து 300க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், ஆய்வுத் துறை மாணவர்கள், ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை கருத்தரங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் கே.காஜா முஹைதீன், முனைவர் கே.விஜய குமார் மற்றும் துறை பேராசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஜமாலில் பெண்களின் கல்விக் கண்ணைத் திறந்த பெருமை மறைந்த முன்னாள் முதல்வர் முனைவர் கே.அப்துல்லா பாட்ஷா

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் கே.அப்துல்லா பாட்ஷா ஜனவரி 12ம் தேதி வியாழக்கிழமை நண்பகல் வபாதாகிவிட்டார். ஜனாஸா நல்லடக்கம் 13ம் தேதி வெள்ளிக் கிழமை காலை திருச்சி காஜாமலை பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

வேலூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த நதியம்பட்டு கிராமத்தில் பிறந்த அப்துல்லா பாட்ஷா பள்ளிப் படிப்பை தனது ஊரிலே முடித்து, பின்னர் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் பியூசி முதல் எம்.ஏ பொருளாதாரம் பட்டம் வரை படித்தார். பின்னர், அதே கல்லூரியில் பொருளாதார உதவி பேராசிரியராக தனது பணியை தொடர்ந்தார். காஜா மியான் விடுதி ஒருங்கினைப்பாளாராகவும், நாட்டு நலப் பணித் திட்டத்தின் ஒருங்கிணை ப்பாளராகவும் பணியாற்றினார். பின்னர், பொருளாதார துறை தலைவராக பொறுப்பேற்ற பிறகு, இவரது துறையில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்துள்ளார். பின்னர் 1998ம் ஆண்டு கல்லூரி முதல்வராக பொறுப்பேற்றார். இவர் பொறுப்பேற்ற காலத்தில் பல்கலைக் கழக மானிய குழு மூலமாக கல்லூரிக்கு ஆய்வு வந்த பொழுது அனைத்து துறைகளை பற்றியும் துல்லியமாக எடுத்துரைத்ததின் பெயரில் 5நட்சத்திர அந்தஸ்து கல்லூரிக்கு கிடைத்தது. ஜித்தா, துபாய் சவூதி அரேபியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு முன்னாள் மாணவர் சங்கத்தின் அழைப்பை ஏற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்.

இவருடைய காலத்தில் 1999ம் ஆண்டு ஜமால் முஹம்மது மகளிர் கல்லூரியும், மேலாண்மைத்துறையும் தொடங்கப்பட்டது. அதே போன்று கல்லூரி வளர்வதற்கும் முக்கிய காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 2003ம் ஆண்டு இவர், கல்லூரி முதல்வர் பணியில் இருந்து ஒய்வு பெற்றார். ஒய்வு பெற்றதும் தனது கல்வியை மக்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் திருச்சி ஜெ.ஜெ பொறியியல் கல்லூரி மேலாண்மைத் துறை இயக்குநராக சிறிது காலம் பணியாற்றினார். பின்னர், சமுதாயத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு பல்வேறு கல்வி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தார்.

இந்நிலையில் முன்னாள் முதல்வர் டாக்டர் கே.அப்துல்லா பாட்ஷா (வயது 76) வியாழக்கிழமை நண்பகல் 11மணியளவில் திடீரென்று உடல் நிலைக் குறைவால் காலமானார். இவருக்கு ஹாஜி மும்தாஜ் பேகம் மனைவியும், நிவாஸ் அஹமது, முஸ்தாக் அஹமது, அர்ஷத் அஹமது ஆகிய 3மகன்கள் இருக்கிறார்கள். மூத்த மகன் ஜமால் முஹம்மது கல்லூரியில் பணி புரிந்து வருகிறார். இவரது ஜனாஸா திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி பள்ளிவாசல் அருகே உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டது.

இவரது ஜனாஸா வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் திருச்சி அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரி பள்ளிவாசலில் தொழுகை நடத்தப்பட்டு பின்னர் காஜாமலை கப்ருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவருக்காக இரங்கல் கூட்டமும் சிறப்பு துஆவும் நடைபெற்றது.

இவரது ஜனாஸா தொழுகையில் பல்வேறு சமுதாய தலைவர்கள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் தலைவர் பேராசிரியர் கே.எம் காதர் மொய்தீன், கல்லூரி செயலாளர், தாளாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன், பொருளாளர் கலீல் அஹமது, கல்லூரி துணைச் செயலாளர் ஹாஜி எம்.ஜே ஜமால் முஹம்மது, கல்லூரியின் முதல்வர் முனைவர் முகமது

சாலிகு, கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் இஸ்மாயில் மொகைதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர்.

முன்னாள் மாணவர் சங்கத்தின் திருச்சி பிரிவு தலைவர் பெமினா முஹம்மது இஸ்மாயில், செயலாளர் எண்டொல்மெண்ட் நௌசாத், பொருளாளர் டாக்டர் கோபிநாத், முன்னாள் செயலாளர் அப்துல் அலீம், நிர்வாகிகள் ஏ.கே அஹமது பிரதர்ஸ் உரிமையாளர் ஏ.கே உசேன், எம்.ஏ.எம் பொறியியல் கல்லூரி தாளாளர் டாக்டர் எம்.ஏ.எம் நிஜாம், திருச்சி செய்தியாளர் எம்.கே சாஹுல் ஹமீத், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தெற்கு மாவட்ட செயலாளர் கே.எம்.கே ஹபீபுர் ரஹ்மான், பொருளாளர் ஹுமாயூன், துணைத் தலைவர் தாசில்தார் அம்சத் இப்ராஹீம், அனைத்து துறை தலைவர்களும், பேராசிரியர்களும், முன்னாள் மாணவர்கள் ஜனாஸா தொழுகையில் கலந்து கொண்டு அவருடைய மஃபிரத்திற்காகவும் துஆ செய்தனர். இவரிடம் பயின்ற முன்னாள் மாணவர்கள் பல்வேறு நாடுகளில் பணிபுரிந்து வருகிறார்கள். இவரது மறைவை கேள்விப் பட்ட மாணவர்கள் அவருடைய மஃபிரத்திற்காக யாசீன் ஓதி துஆ செய்தார்கள்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி நிர்வாகம் சார்பில் கலையரங்கத்தில் தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே காஜா நஜ்முதீன் தலைமையில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்னாள் முதல்வர் கே.அப்துல்லா பாட்ஷா மறைவிற்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த இறங்கல் கூட்டத்தில் பொருளாளர் கலீல் அஹமது, கல்லூரி துணைச் செயலாளர் ஹாஜி எம்.ஜே ஜமால் முஹம்மது, கல்லூரியின் முதல்வர் முனைவர் முகமது சாலிகு, கல்லூரியின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் இஸ்மாயில் மொகைதீன், சுயநிதிப் பிரிவு இயக்குநர் பேராசிரியர் அப்துல் காதர் நிஹால், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசீன் ஜுபைர் மற்றும் அனைத்து துறை பேராசிரிகள் மாணவர்கள், கலந்து கொண்டனர்.

பின்னர், அவர் மஃபிரத்திற்காகவும், யாசீன் ஓதி சிறப்பு துஆ ஓதப்பட்டது. அன்னாரது, இழந்துவாடும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

திருச்சி மாவட்ட அளவில் நடைபெற்ற ஹாக்கி இறுதி போட்டியில் புனித வளனார் கல்லூரியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தை ஜாமல் முகமது கல்லூரி பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி.செந்தில்குமார், கோப்பைகளை வழங்கினார். அதேபோன்ற பெண்கள் பிரிவிற்கு நடைபெற்ற போட்டியில் தொட்டியம் கொங்குநாடு பெறியியல் கல்லூரிருக்கும், ஜமால் முகமது மகளிர் கல்லூரிக்கும் நடைபெற்ற போட்டியில் சாம்பியன் பட்டத்தை ஜமால் முகமது மகளிர் கல்லூரி வென்றது. இந்த கோப்பையை வென்றவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

திருச்சி பல்கலைக்கழக கல்லூரிகளின் மண்டலங்களுக்கான கால்பந்து போட்டி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இறுதிபோட்டியில் பிஷப் ஹுபர் கல்லூரிக்கும் ஜமால் முகமது கல்லூரிக்கும் இறுதி போட்டி நடைபெற்றது. கோல்கல் வித்தியாசத்தின் அடிப்படையில் ஜமால் முகமது கல்லூரி கோப்பையை வென்றது. இந்த கோப்பையை வென்றவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தேசிய இளைஞர்கள் தினம்

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் மற்றும் (அடாசியஸ் ட்ரீம்ஸ்) இணைந்து நடத்தும் கையெழுத்து முகாம் கல்லூரியில் நடைபெற்றது. இம்முகாமை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் காஜா நஜீமுதீன், கல்லூரி முதல்வர் முனைவா முகமது சாலிகு தொடங்கி வைத்தனர். மேலும் கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவர்கள், மாணவிகள் பங்கு பெற்று சிறப்பித்தனர். நிறைவாக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர். காமராஜ், முனைவர். ஆண்டனி ஜெரால்டு, முனைவர் ஆசிக் அகமது மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

வேலைவாய்ப்பு செய்தி மற்றும் கட்டுரைகள் தொகுப்பு
திருச்சி எம்.கே. சாகுல் ஹமீது
செய்தி ஆசிரியர், ஜமாலியன் டைம்ஸ்,

பட்டப்படிப்பு படித்துவிட்டு... அதற்கும் மேலே என்ன படிப்பது ? என்று யோசிக்கிறீர்களா நீங்கள் ?

பட்டப்படிப்பு படித்துவிட்டீர்கள். அதற்கும் மேலே என்ன படிப்பது? என்று யோசிக்கிறீர்களா? நிறைய வேலை வாய்ப்பு வழங்கும் படிப்புதான் chartered

wealth manager R Programme (CWMR).

இந்தப் படிப்பு படித்தவர்கள் சார்ட்டர்ட் வெல்த் மேனேஜர்களாக பணிபுரியலாம். சார்ட்டர்ட் வெல்த் மேனேஜர்கள் எங்கே தேவைப்படுகிறார்கள்?

நம் நாட்டில் கடந்த ஆண்டு வரை தோராயமாக 2.36 லட்சம் கோடீஸ்வரர்களும் (High Networth IndividualsHNI), 1.46 லட்சம் பெருங்கோடீஸ்வரர்களும் (Ultra HNI) உள்ளதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்த எண்ணிக்கை வரும் 2025இல் சுமார் 6 லட்சத்தைத் தாண்டும் என கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களைப் போன்ற பலருக்கும் பணம், நிலம், தொழிற்சாலைகள், எஸ்டேட்ஸ், வங்கிக் கணக்கு, வணிகம் போன்ற செல்வங்களை நிர்வகிப்பதற்கான ஆலோசனை வழங்க சார்டர்டர்ட் வெல்த் மேனேஜர்(CWMR) தேவைப்படுகின்றனர். ஆனால், இன்றைய நிலையில், நிதி திட்டமிடுதலில் மட்டும் சுமார் 60 ஆயிரம் பேர் தேவை என்ற நிலையில், இப்போது சுமார் 5 ஆயிரம் பேர் மட்டுமே உள்ளதாகத் தெரிகிறது. மேலும், நிதி ஆலோசகர், நிதி திட்டமிடுநர்களைக் காட்டிலும் அதிகத் திறன் கொண்டவர்களாகக் கருதப்படும் சார்ட்டர்ட் வெல்த் மேனேஜர்களுக்கு கோடீஸ்வர நிறுவனங்கள், வங்கி அமைப்புகளில் முன்னுரிமை அளித்து வேலை வழங்கப்படுகிறது.

இந்தப் படிப்பை எப்படிப் படிக்கலாம்? எங்கு படிக்கலாம்?

அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்டு சர்வதேச அளவில் செயல்படும் "தி அமெரிக்கன் அகாதெமி ஆப் ஃபினான்ஸ் மேனேஜ்மென்ட்' என்ற அமைப்பு நிதி சார்ந்த பயிற்சிகளை அளித்து தேர்வு நடத்தி வெற்றி பெறுவோருக்கு சர்வதேச தரச் சான்றிதழை வழங்கி வருகிறது. அதில் மிக முக்கியமாகக் கருதப்படுவது CWMR திட்டமாகும்.

அமெரிக்கன் அகாதெமி ஆப் ஃபினான்ஸ் மேனேஜ்மென்ட் (இந்தியா) அமைப்பு அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி மையங்கள் மூலம் இந்தியாவின் பல நகரங்களில் இந்தத் திட்டத்தை அளிக்கிறது. அந்த மையங்கள் மூலம் அமெரிக்கன் அகாதெமியில் பிளஸ் 2 முடித்த மாணவர்கள் பதிவுசெய்து கொண்டு பகுதிநேரமாக தொலைநிலைக் கல்வி, வகுப்பறைக் கல்வி, இணையவழிக் கல்வி மூலம் இந்தத் திட்டத்தில் பயிற்சி பெறலாம்.

CWM திட்டத்தில் 2 நிலைத் தேர்வுகள் உள்ளன. முதல்நிலை என்பது ஃபவுன்டேசன் கோர்ஸ் என்றும், 2ஆவது நிலை அட்வான்ஸ்டு வெல்த் மேனேஜ்மென்ட் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த 2 நிலைகளிலும் தேர்ச்சிபெற குறைந்தது 6 மாதங்கள் தேவைப்படலாம்.

இதற்கான அமெரிக்கன் அகாதெமியின் பதிவுக் கட்டணம் சேவை வரியையும் சேர்த்து ரூ. 11,500. கோர்ஸ் கட்டணமாக ரூ. 6,900, தேர்வுக் கட்டணமாக 2 நிலைக்கும் சேர்த்து ரூ. 6,900, சான்றிதழ் கட்டணமாக சுமார் ரூ. 7000 செலுத்த வேண்டும். இவற்றை அகாதெமியின் அங்கீகாரம் பெற்ற தனியார் கல்வி மையங்கள் மூலம் செலுத்தலாம். இதோடு, அந்த கல்வி மையத்தில் நாம் தேர்ந்தெடுக்கும் பயிற்சி முறைக்கு ஏற்ப தனியாக கட்டணம் செலுத்த வேண்டும். எல்லாவற்றையும் சேர்த்து தோராயமாக ரூ. 4550 ஆயிரம் வரை தேவைப்படலாம்.

அகாதெமியில் பதிவு செய்த ஓராண்டுக்குள் தேர்வு எழுதாவிட்டால், மீண்டும் ரூ. 5750 செலுத்தி பதிவைப் புதுப்பிக்க வேண்டும். இந்தத் தேர்வை இந்தியாவில் 75 நகரங்களில் எழுதலாம். பிளஸ் 2 முடித்தவர்கள் தேர்வில் வெற்றி பெற்றாலும் அவர்கள் பட்டப் படிப்பை முடித்த பிறகே இந்தத் தரச் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்தத் தேர்வை B.Com, BMS, BBI,BAF, BFM, M.Com முடித்தவர்கள் சற்று எளிதாக எதிர்கொள்ளலாம். அதேநேரத்தில் நிதி தொடர்பான வேலைவாய்ப்பை விரும்பும் மற்ற பட்டதாரிகள், MBA, CA, CA Inter முடித்தவர்கள், வங்கி துறை, நிதி சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றுவோரும் இந்தத் தேர்வை எழுதி சான்றிதழ் பெறலாம்.

CWM சான்றிதழ் என்பது உலக தரத்துக்கான சர்வதேச அளவில் மிக உயர்ந்த, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விருது ஆகும். இது உலகின் 150 நாடுகளில் அங்கீகரிக்கப்படுகிறது.

நம்மைப் பொருத்த அளவில், இந்திய பங்குப் பரிவர்த்தனை வாரியத்தின் கீழ் (செபி) இயங்கும், தேசிய பங்குச் சந்தை கழகத்தின் முதலீட்டு ஆலோசகர் ஒழுங்கமைப்பால் அங்கீகரிக்கப்பட்டது.

மேலும், அமெரிக்கன் அகாதெமி ஆப் ஃபினான்ஸ் மேனேஜ்மென்ட் அமைப்பில் சர்வதேச அளவில் உறுப்பினர்களாக உள்ள பல ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் CWM சான்றிதழ் பெற்றவர்களுக்கு தங்கள் நிறுவன வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கின்றன. முன்னதாக, இந்தத் திட்டத்தில் சர்வதேச நிதி அமைப்புகள், அந்த நாடுகளின் வரிச் சட்டங்கள் குறித்து ஆழமான பயிற்சி பெறுவதால், நாம் சர்வதேச அளவில் எந்த நாட்டில் வேண்டுமானாலும் சார்ட்டர்ட் வெல்த் மேனேஜராகப் பணியாற்ற முடியும்.

இந்தச் சான்றிதழ் பெற்ற தொடக்கத்தில் என்ட்ரி லெவலில் உள்ளவர்கள் Executive Asst. Wealth Mgr. பதவிகள் மூலம் ஆண்டுக்கு ரூ. 3 6 லட்சம், Intermediate level இல் உள்ளவர்கள் Sr. Executive Wealth Mgr, Team Leader, Unit Head, Branch Head பதவிகள் மூலம் ஆண்டுக்கு ரூ. 4 8 லட்சம், நண்க்க்ப்ங் ப்ங்ஸ்ங்ப் இல் உள்ளவர்கள் Cluster Zonal, Regional Head, AVPVP Private Banker பதவிகள் மூலம் ஆண்டுக்கு ரூ. 825 லட்சம், Senior level இல் உள்ளவர்கள் Business Head, Channal Head, Product Head பதவிகள் மூலம் ஆண்டுக்கு ரூ. 2550 லட்சம், Top level இல் உள்ளவர்கள் ஆண்டுக்கு ரூ. 50 லட்சத்துக்கும் அதிகமாக ஊதியம் பெறும் வாய்ப்பு உள்ளது.

எனவே, பிளஸ் 2 முடித்து கல்லூரி செல்லும் மாணவர்கள், நிதி சார்ந்த பட்டம் பெற்றவர்கள், நிதித்துறையில் ஆர்வமுள்ள பிற பட்டதாரிகள் என அனைத்து இளைஞர்களும், இந்திய அரசு மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்தச் சான்றிதழைப் பெறுவதன் மூலம் பெரு நிறுவனங்கள், தனியார் வங்கிகள் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் வேலைவாய்ப்பு பெற்று தங்களின் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளலாம்.

ஜமாலியன் டைம்ஸ்
தமிழ் மாத இதழ்

ஆசிரியர்
முனைவர் S.முகமது சாலிகு M.Sc.,B.Ed.,Ph.D.,
கல்லூரி முதல்வர்

செய்தி ஆசிரியர்
M.K.ஷாகுல் ஹமீது M.Sc.,M.Phil., (Journalism)

ஆசிரியர் குழு
முனைவர் D.I.ஜார்ஜ் அமௌலரத்தினம் M.C.A.,M.Phil.,Ph.D.,
அறிவியல் முதன்மையர், இயக்குனர் M.C.A.,
K.சண்முக வேலாயுதம் M.A.,M.Phil.,
உதவிப் பேராசிரியர், காட்சித்தொடர்பியல்துறை
B.ராமகிருஷ்ணன் M.F.A.,
உதவிப் பேராசிரியர், காட்சித்தொடர்பியல் துறை

நிருபர்கள்
S.முகமது ருஜானுப், J.நவநீத்,
G.ஹுசைன் அகமது கான், S.ராஜேஷ்குமார்

ஒளிப்படக் கலைஞர்கள்
R. முகமது காமில், A. விஜய் சாமுவேல்
C. கார்த்திகேயன்

தொடர்புக்கு
காட்சித் தொடர்பியல் துறை
ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி-620020

காட்சியியல் தொடர்பியல் துறையின் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்படும் ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து வெளிவர தங்களின் கருத்துகள் படைப்புகள், துறை செய்திகள் எங்களுக்கு அனுப்பவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
துறைத் தலைவர்
காட்சியில் தொடர்பியல் துறை
ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சி-620020
jmcviscom@gmail.com

மாணவர்களின் பயிற்சிக்காக வெளியிடப்படும் இந்த இதழில் வரும் கருத்துக்கள் அனைத்தும் துறையின் கருத்தல்ல.

ஜமாலியன் டைம்ஸ் மாத இதழ் பப்ளிகேஷன் சார்பாக அச்சிடுவோர்
மக்கள் குரல் நடுநிலை நாளேடு TRINITY MIRROR

துறை தலைவர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ-மாணவிகள் ஒரு வேண்டுகோள்

'ஜமால் டைம்ஸ்' தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. உங்கள் கருத்துக்களை தமிழில் எழுதி எங்களுக்கு அனுப்பலாம். அனுப்ப வேண்டிய முகவரி

முதல்வர்
ஆசிரியர், ஜமால் டைம்ஸ்,
காட்சியல் தொடர்புத் துறை, திருச்சி

என்ற முகவரிக்கு கடிதம் மூலமாகவோ, அல்லது இ-மெயில் மூலமாகவோ கருத்துக்களை அனுப்பலாம்.

jmcviscom@gmail.com